# கூடுதல் மெட்ரோ ரயில் இன்று முதல் இயக்கம்

**சென்னை, ஜூலை 18–**

சென்னையில், இன்று முதல் மெட்ரோ ரயில்கள், கூடுதல் எண்ணிக்கையில் இயக்கப்படுகின்றன.



இது குறித்து, மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளதாவது:

சென்னை மெட்ரோ ரயில் சேவை, இன்று முதல் ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் அரசு விடுமுறை நாட்களில், காலை 7:00 மணி முதல், இரவு 10:00 மணி வரை இயக்கப்படும். இதற்காக 10 நிமிட இடைவெளியில், கூடுதல் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன.

மெட்ரோ ரயில் நிலையம் மற்றும் ரயில்களில் முக கவசம் அணியாத பயணியரிடம் நேற்று முன்தினம் வரை 9,200 ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது. பயணிகள், கொரோனா தடுப்பு விதிமுறைகளை கட்டாயம் கடைப்பிடிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த, மாதம் 21ம் தேதி முதல் நேற்று முன்தினம் வரை, 12 லட்சத்து 37 ஆயிரத்து 552 பயணியர் பயணித்துள்ளனர். நேற்று முன்தினம் மட்டும் 69 ஆயிரத்து 794 பயணியர் பயணித்துள்ளது குறிப்பிடத்தக்கது.